# செய்திக்கதிர்

இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

அன்பளிப்பு :- திரு. சி. நந்தகுமார்.

1-9-85


## காணாமல்போன உடல்கள்!



## தமிழ் பிரதேசங்களில் சர்வதேச அமைதிப்படை?

FORTNIGHT NEWS REVIEW

பிந்திய பதிப்பு

# ஆலால், தருமர் கொலை
# அரசியலில் அதிர்ச்சி!

## பதவி இழந்தபின் பலியானவர்கள்



வி. தர்மலிங்கம்



மு. ஆலாலசுந்தரம்

இலங்கைப் பாராளுமன்றத்தில் இருபத்திஞன்கு ஆண்டுகளாகப் பிரதிநிதித்துவம் வகித்த வி. தர்மலிங்கமும் இரண்டு வருடங்கள் மட்டும் பிரதிநிதித்துவம் வகித்த திரு. மு.ஆலாலசுந்தரமும் 2-9-85 திங்கட்கிழமை இரவு இனந் தெரியாதவர்களினுல் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இருவரின் சடலங்களும் செவ்வாய் அதிகாலை உறவினர்களாலும் ஆதரவாளர்களாலும் அவர்களின் இல்லங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இலங்கைத் தமிழரசுக்கட்சியிலும் பின்னர் கூட்டணியிலும் அங்கம் வகித்துப் பல போராட்டங்களிலும் ஈடுபட்டுழைத்த இருவரும் கொலை செய்யப்பட்டுக் கிடந்த செய்தி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் காட்டுத்தீபோல் பரவியதைத் தொடர்ந்து இருவரது இல்லங்களின் முன்பும் பெருந் தொகையான மக்கள் திரண்டனர்.

''காட்டிக் கொடுப்பவர்களுக்கும், ஈழத்தை அடகு வைப்பவர்களுக்கும் குறிப்பாக கூட்டணியினருக்கு இது தான் தண்டனை — மானமுள்ள தமிழர்'' என்று எழுதப்பட்ட கடதாசித்துண்டுகள் இரண்டு மட்டுமே இருவரின் சடலங்களுக்கும் அருகில் காணப்பட்டன.

இக்கொலைபற்றிய விபரம் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை. ஆனுல் இச்சம்பவம் அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இக்கொலைகள் பற்றிய விபரமான கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்,

# தமிழர் அழிவைத் தடுக்க அமைதிப்படை தேவை

**திம்புப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமானாலும் சரி அடுத்து வேறு சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் சரி இன்று இலங்கையில் தமிழ் இனம் தினமும் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு ஐ. நா. சர்வதேச அமைதிப்படை ஒன்று இங்கு அனுப்பப்படவேண்டுமெனக் குரல் எழுப்ப வேண்டியது இன்று அவசியமும் அவசரமுமாகிவிட்டது.**

ஈழத்தில் தமிழர்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக ஐ. நா. அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பும்படி கோருமாறு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழ் நாட்டில் காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் சில தினங்களுக்கு முன் தந்தி மூலம் கேட்டிருப்பது இதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த ஆஸ்திரேலிய நாட்டின் செனட்டரான திரு அலென் மிஸ்ஸென் இலங்கையில் ஒரு ஐ. நா. சர்வதேச அமைதிப்படையை வைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியிருந்தார். கடந்த ஜூன் மாதமே இங்குள்ள அழிவு நிலையை அந்த ஆஸி. செனட்டர் நன்கு அறிந்திருக்கிறார். இந்த இடைக்காலத்தில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகம்.

**ஆஸி. செனட்டர் சமர்ப்பித்த மகஜர்:**

ரோமாபுரியில் சமீபத்தில் நடந்த ஐ. நா. நிறுவன மாநாட்டொன்றில் செனட்டர் அலன் மிஸ்ஸென் இலங்கையிலுள்ள இன்றைய நிலைமை பற்றி சமர்ப்பித்த ஓர் அறிக்கையில் இலங்

(4-ம் பக்கம் பார்க்க)

## உங்களோடு

"பெற்ற தாயும் பிறந்த
பொன்னாடும்
நற்றவ வானினும்
நனி சிறந்தனவே"

பெற்ற தாயுடன் பிறந்த பொன்னாட்டில் வாழ முடியாத நிலையில் வெளிநாடுகளில் அலைந்து திரியும் ஈழத் தமிழ் இளைஞர் பலர்!

தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற தொழிலும் பதவியும் கிடைக்காததால் தம் ஆற்றலை வெளிப்படுத்தக்கூடிய நாடுகளைத் தேடிச் சென்றுள்ள தமிழர் மற்றும் சிலர்.

தாம் பெற்ற அறிவையும் தமது ஆற்றலையும் இந்நாட்டுக்கே பயன்படுத்த விரும்பினாலும் இங்கு பாதுகாப்புடன் வாழமுடியாத நிலையில் வெளிநாடு சென்று வாழும் தமிழர் வேறு சிலர்.

அடிக்கடி இனக்கலவரங்களால் உடமைகளையும் உற்றாரையும் இழந்த பின் இனியும் இங்கு வாழமுடியாது என்ற நிலையில் வெளிநாடுகளில் குடியேறியுள்ள ஈழத் தமிழ்க் குடும்பங்கள் சில!

'பாதுகாப்புக்களி'டமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கடல் கடந்துசென்ற குடும்பங்களும் சகலவற்றையும் இழந்து அநாதைகளாகவும் அகதிகளாகவும் அக்கரைசென்றடைந்துள்ள குடும்பங்களும் இன்னும் பல.

பூஸாவிலும், மற்றும் முகாம்களிலும் வதைபடாமல், எங்கிருந்தாலும் பிள்ளைகள் சுகமாக இருக்கட்டும்' என்று பெற்றோரே அனுப்பி வைத்த வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழ் இளைஞர் சிலர்.

பொருளாதார நிலை காரணமாக வெளியில் எந்த வேலையும் செய்யலாமென்று வேலை வாய்ப்பை மட்டுமே கருத்திற் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்றடைந்துள்ள ஈழத் தமிழர்களுமுண்டு.

எதற்காகச் சென்றிருந்தாலும் பிறந்த பொன்னாட்டில் நடப்பது என்ன? பெற்றோரும் உற்றோரும் என்ன நிலையில் இருக்கின்றனர் என்று அறிந்து கொள்ள - அதுவும் - இன்று தினமும் வெளிவரும் அழிப்புச் செய்திகளைத் தொடர்ந்து - உண்மை நிலையை விபரமாகத் தெரிந்துகொள்ள அவர்கள் துடிக்கிறார்கள்!

எந்த நாட்டில் எத்தனைகாலம் தங்கினாலும் என்றாவது ஒருநாள் அவர்கள் பிறந்த பொன்னாட்டிற்கு வர வேண்டியவர்கள்; வருவார்கள்!

அவர்களும் எமது மைந்தர்களே! நமது மண்ணை வளம்கொழிக்கச் செய்யும் கடமையும் பொறுப்பும் அவர்களுக்கும் இருக்கிறது.

இதனால்தான் அவர்கள் இங்கு என்ன நடக்கிறதென்பதை அறிந்து கொள்ளத் துடிக்கிறார்கள்.

இன்றைய உண்மை நிலையை அவர்களுக்கு சரியாக எடுத்துக் கூறவும் அவர்கள் தங்கள் அன்னை பூமிக்கு ஆற்றவேண்டிய பங்களிப்பை உணர்த்தவும் ஒரு சாதனம் அவசியம்.

இந்தப் பொறுப்பைச்சரிவரச் செய்ய வேண்டும்; செய்ய முடியும் என்ற நம்கையோடு 'செய்திக்கதிர்' வெளிவருகிறது.

கதிரின்ஒளி உலகெங்கும் வீசித்தனதுபணியைச் செவ்வனே செய்வதற்கு உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழ் மக்களினதும் இங்குள்ள மக்களினதும் உதவியும் ஒத்துழைப்பும் தேவை.

நிச்சயம் எமக்கு அவர்கள் கைகொடுப்பார்களென்ற நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கையுடன் எமது பணி தொடரும்.

கோபு
ஆசிரியர்.

### தமிழர் அழிவைத் தடுக்க

# அமைதிப் படைக்கு சைப்பிரஸ் வழிகாட்டி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்க வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

ஈழத்தில் தமிழர்கள் வீடுகளிலுமிருக்க முடியாது; வீதிகளிலும் சுதந்திரமாகச் செல்ல முடியாது; தரையிலும் பாதுகாப்பில்லை; கடலிலும் அவர்களைக் காப்பாற்றுவார் யாருமில்லை. உயிருக்கு அஞ்சி அகதிமுகாம்களில் தஞ்சமடைந்த தமிழர்களும் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுகிறார்கள். பச்சிளம் குழந்தைமுதல் குடுகுடு கிழவர்வரை பயங்கரவாதிகள் என்ற போர்வையில் படுகொலை செய்யப்படுகிறார்கள். கொலையுண்டவர்களின் உடல்களைக்கூட கண்ணால் காண முடியாத அநியாயம் இங்கு அதிகம்.

இலங்கையைவிடப் பரப்பளவிலும் ஜனத்தொகையிலும் சிறிய நாடு சைப்பிரஸ். இங்கு கிரேக்கர்கள் எழுபத்தைந்து வீதமும் சைப்பிரஸ் துருக்கியர் இருபது வீதமும் வாழ்கிறார்கள். கிரேக்கத்துடன் சைப்பிரசை இணைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி 1955 ஆம் ஆண்டில் வலுப்பெற்ற போது சிறுபான்மையினரான சைப்பிரஸ் துருக்கியர் அதை எதிர்த்தனர். இதனால் 1955 ஆம் 56-ஆம் ஆண்டுகளில் அங்கு வகுப்புக் கலகம் தோன்றியது. 1959 ஆம் ஆண்டில் சைப்பிரசை சுதந்திரக் குடியரசாக்கும் திட்டமொன்றை பிரிட்டிஷ், கிரேக்க, துருக்கிய, சைப்பிரஸ் தலைவர்கள் அங்கீகரித்தனர். இத்திட்டத்தில் சிறுபான்மையினரான துருக்கியர்களுக்கு அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்டதுடன் இன அடிப்படையில் அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. 1960-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ஆந் தேதி சைப்ரஸ் பூரண சுதந்திரமடைந்தது.

ஆனால் சைப்பிரஸ் கிரேக்கர்களுக்கும் சிறுபான்மையினரான சைப்பிரஸ் துருக்கியர்களுக்குமிடையில் மீண்டும் இனக்கலகம் வெடித்தது. இரு பகுதியிலும் இழப்புக்கள் ஏற்பட்டன. இந்நிலையில் அங்கு மேலும் அழிவு ஏற்படாமல் தடுப்பதற்காக 1964 ஆம் ஆண்டில் ஐ. நா. சர்வதேச அமைதிப் படை அனுப்பிவைக்கப்பட்டது. இது மேலும் சில ஆண்டுகள் நிலைகொண்டிருந்தது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் அழிவு அதிகரிக்காமலும் அது உதவியது.

இலங்கையில் 1956-ஆம் ஆண்டு தொடக்கம் 1983-ஆண்டுவரை காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக்கலவரங்களில் தமிழர்கள் உயிரையும் உடமைகளையும் பெருமளவில் இழந்தனர். ஆனால் 1969ஆம் ஆண்டுமுதல் பயங்கரவாதத் தடுப்பு என்ற போர்வையில் தினமும் தமிழினம் அழிக்கப்படுகிறது. தமிழ் இளைஞர்கள் அநியாயமாகச் சிறைகளில் வதைக்கப்படுகிறார்கள்.

கொல்லப்படும் தமிழர்களின் உடல்களை அடையாளம் கண்டு கணிப்பெடுப்பதற்காவது ஐ. நா. அமைதிப் படை இங்கு அவசியம் தேவை.

குமரி அனந்தனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள மற்றும் தலைவர்களும் குரல் எழுப்பவேண்டும். ஐ.நா. அமைதிப்படை இங்குவந்தால் உண்மைநிலை ஓரளவாவது உலகுக்குப் புரியும்


செய்திக் கதிர்

**சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| இலங்கை | — ஒருவருடம் | — ரூ. 90.00 | |
| | ஆறுமாதம் | — " 45.00 | |
| இந்தியா | — ஒருவருடம் | — 125-00 | (இந்தியரூபாய்கள்) |
| சிங்கப்பூர் | — ஒருவருடம் | — 15.00 | (U S. டொலர்) |
| மலேசியா | — | | |
| பிறநாடுகள் | — ஒருவருடம் | — 25.00 | (U. S. |
| காசோலைகள் | — SAIBABA ADVERTISING ASSOCIATES | | |

உங்கள் சந்தாவை உடனே செலுத்தி பிரதிகளை
உறுதி செய்து கொள்ளுங்கள்

செய்திக் கதிர்
**CHEITHIKKATHIR**

140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
இலங்கை

140, Navalar Road,
JAFFNA.
Sri Lanka.


## தேவை தொடர்ந்து இருக்கும்

பிந்திக் கிடைத்த தகவல்களுக்கு ஏற்ப, திம்புவில் ஒரு சமாதானமான ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான சில சாத்தியக் கூறுகள் உருவாகினும், குறித்த ஒப்பந்தத்தில் தமிழ்ப்பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறுவதற்கான ஏற்பாடுகள் இல்லாத வரையில் மாமூல் இராணுவ அசம்பாவிதங்கள் நிகழ்வதைத் தவிர்க்க முடியாது. எனவே சமாதானத்தைக் காக்கும் ஒரு அமைதிப் படையின் தேவை தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கும்.

வடக்கும் கிழக்கும் இணையக்கூடிய சாத்தியமில்லாத உடன்பாடு எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்க் குழுக்கள் ஏற்கனவே உறுதியாகத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன உடல்கள்

இந்த வருடத்தின் மே, ஜூன் மாதங்களில் நடைபெற்றபயங்கரமான துயரந்தரும் நிகழ்ச்சிகள் பலவற்றிற்கு வரலாற்றிலும் மனதிலும் கூடப் பதிவுகள் இல்லாமலே போய்விடக் கூடிய ஒரு சூழல் இருந்தது. ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில், இந்த விஷயங்களைப் பற்றி, அறிந்திருந்தும் எழுத முடியாதபடி இறுக்கமான 'கணிக்கை' இருந்தது. அதைவிடவும் சம்பவங்கள் நடைபெற்ற இடங்களுக்கு நேரடியாகச் சென்று உறுதிப்படுத்தாத தகவல்களை எழுதுவதிலும் பல அபாயங்கள் இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தை விட்டு வேறு இடங்களுக்கு 'உத்தியோக பூர்வமான' பயணஞ் செய்வதில் நிறைந்த ஆபத்துக்களும் இருந்தன.

இத்தகையதொரு பின்னணியில் தான் மட்டக்களப்புக்கூடாக கல்முனை மூதூர் வரை சென்றுவர வேண்டும் என்ற முடிவை நான் எடுக்க நேரிட்டது. கடைமுகாம்களையும், சோதனை நடைபெறும் இடங்களையும் கடந்து செல்வதற்கு வசதியாக மட்டக்களப்பு செல்லும் வரை ஒரு சிநேகிதியையும் சேர்த்துக் கொண்டது ஒரு சாதுரியமான அம்சமாகும். (பிறகு திரும்பி வரும்போது, தனியே என்பதால் அநுராதபுரம் ஊர்காவல் படையிடம் அகப்பட்டு ஒருமணிநேரம் அவஸ்தைப் பட்டது வேறொரு கதை!)

என்னுடைய பிரதான நோக்கங்கள் இரண்டாக இருந்தன. ஒன்று கல்முனையில் 50 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட பின் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டமை தொடர்பான உண்மை விவரங்களை அறிதல். இரண்டாவது மூதூரில் நிகழ்ந்த அனர்த்தங்களைப் பற்றிய 'உண்மை'களை வெளியில் கொண்டு வருதல்.

1983 ஜூலை இனசங்காரத்திற்குப் பிறகு இலங்கையில் தமிழ் மக்களின் நிலை குறித்த அக்கறையும் கவனமும் பரவலாக உலக நாடுகளிடம் ஏற்பட்டிருந்தாலும், கிழக்கு மாகாணம், மற்றும் காட்டுப் பகுதிக்குள் இருக்கும் சிறு சிறு தமிழ் மக்களின் கிராமங்களில் இடம்பெறும் அநியாயங்கள், படுகொலைகள் பற்றிய தகவல்கள் பெரும்பாலும் வெளிவருவதில்லை. அல்லது அவற்றின் பரிமாணங்கள் போதுமான அளவு வெளிப்படுவதில்லை

கிழக்கு எனக்கு மிகவும் பரிச்சயமானதும் மிகவும்பிடித்ததுமான இடங்களுள் ஒன்று. இம்முறை, பொலிஸ் கொமாண்டோக்கள் என அழைக்கப்படும் சிறிலங்கா பொலிஸ் பிரிவின் விசேட அதிரடிப்படை தன்னுடைய அராஜகத்தை அவிழ்த்து விட்ட இடங்களில் நற்பட்டிமுனை எனும் கிராமம் முக்கியமானது. கல்முனையிலிருந்து மூன்று அல்லது நான்கு 'கூப்பிடு தூரத்தில் உள்ளது, இது.

## சித்தார்த்தா

மே மாதம் 17-ம் திகதி அதிகாலை வழமை போலவே விடிந்தது என்று நினைத்துக் கொண்டு முரளிதரன் (22) வீட்டுக்கதவை திறந்து வெளியில் வந்த போதுதான் 'அவற்றைக்' காண நேர்ந்தது. இலக்கத் தகடுகள் இல்லாத ஏழு ஜீப்வண்டிகள். அவற்றுள் போர்க்கால ஆடைகளில் கொமாண்டோக்கள்.

முரளிதரனின் அண்ணன் சுதாகரன் (24) உள்ளே தூங்கிக் கொண்டிருந்தான். தீர்மானிப்பதற்குரிய கால அவகாசம் கூட இல்லாமல் இருவரும் ஜீப்பினுள் இழுத்தெறியப்படுவதை முரளிதரனின் இன்னொரு அண்ணன் ஒளித்திருந்து பார்க்க நேர்ந்தது.

காலை 6-15 மணிக்குள்ளாக ஒரு பாரிய சுற்றிவளைத்துக் கைது செய்தலின் விளைவாக இருபத்தைந்து இளைஞர்கள் கொமாண்டோக்களினால் கொண்டு செல்லப்பட்டார்கள். நற்பட்டிமுனை கிராமத்தில் இருந்த முஸ்லிம் பிரிவை இந்தக் கொமாண்டோக்கள் மிகவும் எச்சரிக்கையாகத் தவிர்த்திருந்தார்கள்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் உள்ளூர் பிரஜைகள் குழுவிடம் இதுபற்றி அறிவித்ததைத் தொடர்ந்து பிரஜைகள் குழுவினர் கல்லடி. கொமாண்டோ முகாமுடனும் களுவாஞ்சிக்குடி கொமாண்டோ முகாமுடனும் தொடர்பு கொண்டு விசாரித்தனர். கல்லடியிலிருந்து மட்டும் சில தகவல்கள் அவர்களுக்குக் கிடைத்தன.

'16 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள்; 6 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களுள் யாராவது நற்பட்டிமுனையைச் சேர்ந்தவர்களாயின் தாராளமாக வந்து அடையாளம் காணலாம்—'.

பல தடவைகள் முயற்சி செய்த பிற்பாடு மே 19-ம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை முகாம் பொறுப்பாளர்களைச் சந்திக்க முடிந்த பிரஜைகள் குழுவிற்கு '16 பயங்கரவாதிகளும்' விடுதலை செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டதுடன், கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெற்றோரின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டன.

### மயானத்தில் புதைக்கப்பட்டனவா?

இந்த நேரத்தில், திருக்கோவில் எனுமிடத்திற்கு அண்மையில் உள்ள ஒரு மயானத்தில் பல சடலங்கள் புதைக்கப்பட்டதாக கதைகள் எழத் தொடங்கின. கொமாண்டோக்கள் இந்த மயானத்திற்கு வந்து பாரிய கிடங்குகளை இளைஞர்களைக் கொண்டு தோண்டச் செய்து அவற்றுள் இளைஞர்களைச் சுட்டுப் புதைத்தார்கள் என்பதை நேரில் கண்டவர்கள் இருந்தார்கள்.

தம்பட்டை எனுமிடத்தில் அமைந்துள்ள மயானம் பிரதான வீதிக்கு அண்மையிலிருந்து 16-ம் திகதி வியாழக்கிழமையன்றும் அடுத்த நாளும் இரவுகளில் மயானத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன. இந்த நேரங்களில் பிரதான

தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க

# இனக்கலகம்

## பண்டாரநாயக்கா முதல் ஜே. ஆர். வரை

1959 - ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் இலங்கையின் நான்காவது பிரதம மந்திரியாகப் பதவி வகித்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயகா ஒரு கொலைகாரனால் சுட்டுக் கொல்லப்பட்டார்

இக்கொலை சம்பந்தமாக புத்தரகித்த தேரோ, சோமராம தேரோ ஆகிய பௌத்த பிக்குகள் உட்பட மற்றும் சிலர்மீது குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணை மாதக் கணக்கில் நடைபெற்றது.

வழக்கு முடிவில் சோமராம தேரோவுக்கு மரண தண்டனையும் புத்தரகித்த தேரோவுக்கும் மற்றும் சிலருக்கும் ஆயுட்காலச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. மற்றும் சிலர் விடுதலை பெற்றனர். சோமராம தூக்கிலிடப்பட்டார்.

நீதிமன்றம் தீர்ப்பு அளித்து தண்டனையும் நிறைவேற்றப்பட்ட பின்னர் பண்டார நாயகா கொலை சம்பந்தமான அரசியல் பின்னணி மற்றும் சதி சம்பந்தமாக ஆராய்வதற்கு சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. மூன்று நாடுகளைச்சேர்ந்த நீதிபதிகளுடன் இலங்கைத் தலைமை நீதிபதியையும் கொண்ட சர்வதேச நீதிவிசாரணை ஆணைக்குழு இது பற்றி விசாரணை செய்தது.

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயகா உயிருடனிருந்தபோது அவர் பதவிக்கு வந்தவுடன் கொண்டு வந்த சிங்களம் மட்டும் மசோதாவைத் தொடர்ந்து— கொழும்பிலும் கல்லோயாச அம்பாறையிலும் இனக்கலவரம் வெடித்து தமிழ் மக்கள் உயிரையும் உடமைகளையும் இழந்த சமயத்திலும் அதுபற்றி நீதிவிசாரணையோ, பொது விசாரணையோ நடத்துவதற்கு முன்வரவில்லை.

1958 ஆம் ஆண்டில் பொலனறுவையில் ஆரம்பித்து நாடு முழுவதும் திட்டமிட்டு நடந்த இனக்கலவரத்தில் தமிழ் மக்கள் உயிரையும், உடமையையும் மானத்தையும் இழந்து அநாதைகளாகக் கப்பல்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் போய்ச் சேர்ந்த சமயத்திலும் இக்கலவரங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு நீதிவிசாரணைக்குழுவையோ வேறுபொது விசாரணைக்குழுவையோ நியமிக்க எஸ். டபிள்யு. ஆர். பண்டாரநாயகா விரும்பவில்லை!

அன்றே இந்த விசாரணைக் குழுக்களை நியமித்து நிலைமைகளை ஆராய்ந்திருந்தால் தொடர்ந்தும் இனக்கலவரங்கள் இங்கு தலையெடுக்காதிருந்திருக்கலாம்; பண்டாரநாயகாவும் அகாலமாக மரணத்தைத் தழுவாதிருந்திருப்பார்!

பண்டார நாயகாவின் மரணத்தின் பின் அவரது மரணத்துக்குப் பின்னணி என்னவென்பது பற்றி ஆராய்வதற்கு ஒரு சர்வதேச நீதிவிசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது!

1977-ஆம் ஆண்டில் இன்றைய அரசு ஆட்சிக்கு வந்ததும் கட்டவிழ்க்கு விடப்பட்ட இனக்கலகம் மீண்டும் தமிழ் மக்களை அநாதைகளாகக் கப்பலேற்றி வடக்குக்கு அனுப்பி வைத்தது.

பலரின் வற்புறுத்தலைத் தொடர்ந்து 77-ஆம் ஆண்டுக் கலகம் பற்றி விசாரணை செய்வதற்கு சன்சோனிக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

அது ஒரு கண்துடைப்புக் கமிஷனாகவே முடிந்தது. இன்று வரை அந்தக் கமிஷனின் அறிக்கை வெளியிடப்படவில்லை. அதன் சிபார்சுகள் அமுல் நடத்தப்படவுமில்லை!

மீண்டும் 81ஆம் ஆண்டு நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்டு தமிழ் மக்கள் மற்றொரு அழிவுக்கு உள்ளாகினர்.

தமிழனின் அறிவாலயம் அக்கினிக்கு இரையானது. தமிழரின் உயிரும் உடமைகளும் அவனது சொந்தப் பிரதேசத்திலேயே அழிக்கப்பட்டது!

இது பற்றியும் எந்தவிசாரணையும் நடைபெறவில்லை!

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் ஏற்பட்ட அழிவை மறைக்க முடியாததாலும் அறிவாலயமான நூல் நிலையத்துக்கு கொள்ளிவைத்த சம்பவம் உலகநாடுகளில் பரவியதாலும் நஷ்டஈடு வழங்குவதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் கமிஷன் நியமிக்க வேண்டியேற்பட்டதால் லயனல் பெர்ணண்டோ கமிஷன் நியமிக்கப்பட்டது. தனது சிபார்சுகள் தாமதமின்றி அமுல் நடத்தப்படுமென வாக்குறுதி பெற்றுக் கொண்டு லயனல் பெர்ணண்டோ கமிஷன் விசாரணை செய்து சிபார்சும் செய்தது. இதன்படி நஷ்டஈடும் வழங்கப்பட்டது. ஆனால் யாழ். நூலகத்துக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்ட ஒரு கோடி பத்து லட்சம் ரூபாய்க்குப் பதிலாக இதுவரை இருபது லட்சம் ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நஷ்டஈடு பற்றிய விசாரணையைத் தவிர கலகம் எப்படி ஏற்பட்டதென்பதைப் பற்றியோ தொடர்ந்தும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுப்பது பற்றியோ எந்தவித விசாரணையும் மேற்கொள்ள முயர்சி செய்யப்படவில்லை;

1977 ஆம் ஆண்டிலும் 1981 ஆம் ஆண்டிலும் நடந்த சம்பவங்களின் பின் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடு முழுவதிலும் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுத் தாக்குதல் நடைபெற்றது; தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன; கொலையும் கற்பழிப்பும் இடம்பெற்றன. தமிழர்கள் மீண்டும் தங்கள் பாரம்பரியமான பிரதேசங்களுக்குக கப்பலேற்றி அனுப்பப்பட்டனர் இதுவரை இலங்கையில் நடந்த வகுப்புக் கலவரங்களுக்கெல்லாம சிகரம் வைத்தது போல் 1983—ஆம் ஆண்டு ஆடிக்கலவரம் அமைந்தது.

இதற்குப் பின்னரும் கூட இனக் கலவரம் பற்றி எந்த ஒரு விசாரணைக்கும் முயற்சி செய்யப்படவில்லை;

# அன்று விதைத்தது இன்று பூவாகிக் காயாகி......

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ஆந்தேதி சிங்களம் மட்டும் மசோதாவை அன்றைய பிரதமர் திரு எஸ் டபிள்யு. ஆர் டி பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். இம் மசோதாவை எதிர்த்துப் பாராளுமன்றத்தின் முன் காலிமுகத்திடலில் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்த தமிழரசுக்கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் காவல்துறையினரின் கண்முன்னாலேயே காடையர்களால் தாக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து கொழும்பு நகரின் சிலபகுதிகளிலும் அம்பாறை, இங்கினியாகலையிலும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். கொலை, கொள்ளைகள் இடம்பெற்றன. அன்று தொடங்கிய தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்கள் இன்றுவரை ஓயவில்லை; இன்னமும் விரிவடைந்துள்ளது. அன்று சிங்களம் மட்டும் மசோதா மீதான விவாதத்தில் பேசிய தமிழ்த் தலைவர்களும் இடதுசாரியினரும் நாடு பிளவுபடுவதற்கு சிங்களம் மட்டும் மசோதா வழிவகுக்குமென்று எச்சரித்தார்கள். அன்று விதைத்தது இன்று பூவாகிக் காயாகி நிற்கிறது. கனியாகும் காலம் எப்போது?

## "துவக்குப் பிடிக்கப் படிப்போம்"

ஸி. சுந்தரலிங்கம் (வவுனியா)

"...... ஓ- பூனையே, தயவு செய்து கேளும். ஒரு தடவைக்கு மேலாக மகாராணியாரின் அழைப்பைப் பெற்று மகாராணியாருடன் பேசவும் உண்ணவும், வாய்ப்பையும் கௌரவத்தையும் பெற்றவர் வவுனியாப் பிரதிநிதி. அவர் இங்கிலாந்தின் மகாராணியைப் பார்ப்பதற்காக லண்டனுக்குச் செல்ல விரும்பவில்லை: அதைத்தான் நான் செய்யப் போகிறேன் என்று நண்பர் (எஸ் டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயகா) கூறினார் இங்கிலாந்தின் மகாராணியை அவர் (சுந்தரலிங்கம்) போய்ப் பார்ப்பதற்கு விரும்பவில்லை. தனது மகாராணியை, இலங்கையின் மகாராணியை, யாருக்கு விசுவாசம் தெரிவித்துப் பிரமாணம் செய்தாரோ அந்த மகாராணியைப் பார்த்து இலங்கையின் இன்றைய பிரதம மந்திரியின் தவறான செயல்களை அவரது சொந்தக் கவனத்துக்குக் கொண்டுவருவதுடன் திருக்கோணமலையில் தொடர்ந்தும் பிரிட்டிஷ் தளம் இருப்பதற்கு நியாயம் வழங்கும் ஒப்பந்தங்கள் இருப்பதையும் மகாராணியாருக்குத் தெரிவிப்பதுடன் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படாமல் அத்தளத்தின் எதிர்காலம் பற்றி எந்த முடிவும் எடுக்கப்படக் கூடாதென்றும் சொல்லவிருக்கின்றார்,

"இன்றைய அரசின் நடவடிக்கை காரணமாக, இலங்கைத்தமிழ் பேசும் மக்கள் தங்கள் பாதுகாப்பிற்காக திருக்கோணமலையைத் தளமாகக் கொண்ட ஒரு தனி ராச்சியத்தைக் கோருகிறார்கள். பாராளுமன்ற முறையில் தமிழ்பேசும் மக்களின் ராச்சியத்தைப் பெறத் தவறினால் பாராளுமன்றத்துக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டியேற்படும்."

"......... எனது நல்ல நண்பருடையதைப் போன்ற அநீதியான அரசிடமிருந்து விடுதலை பெறுவதற்கு தமிழ் பேசும் மக்கள் தங்களுக்குள்ள சக்திக்குட்பட்ட சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு எமது ஆற்றலுக்கேற்ப நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"... நீங்கள் இந்த மசோதாவை நிறைவேற்றி சிங்களத்தை உத்தியோக மொழியாக்கிவிட்டீர்களென்று வைத்துக் கொள்வோம் யாழ்ப்பாண மாநகர சபைக்கு என்ன நடைபெறுகிறதென்பதைப் பார்ப்போம். வழமையான கூட்ட நடவடிக்கைகள் தமிழில் நடைபெறும். ஆனால் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு எழுத வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதும், இப்படி ஒருபோதும் ஏற்படாது என்று நம்புகிறேன். அப்படி வந்தால் என்ன நடக்கும்? (குறுக்கீடுகள்) எதிர்ப்பும் கிளர்ச்சியும் இருக்கும். இருந்து பாருங்கள். (சிரிப்பு) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஒருவர் எழுதுவதானால் சிங்களத்தில் எழுத வேண்டும்.

ஸி. ஆர். பெலிகம்மன (உள்ளூராட்சி கலாசார விவகார உதவி அமைச்சர்)

"சிங்களத்தைப் படியுங்கள்."

சுந்தரலிங்கம்: ஆம். நாங்கள் சிங்களத்தைப் படிக்குமுன் துப்பாக்கி பிடிக்கப் படிப்போம். அந்த விஷயத்தை தவறாக நினைக்க வேண்டாம்......."

திரு. சுந்தரலிங்கம்: இலங்கை பிரிந்தால் அதற்கு சிங்கள சோலமனும் மேல் தொப்பியுந்தான் காரணமென்பதை வரலாறு எப்போதும் சொல்லும். கௌரவ. எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா—

நீர் ஒருபோதும் அந்த மேல் தொப்பியைப் பெறமாட்டீர்.

திரு. சுந்தரலிங்கம்: இந்த விலையில் அந்தத் தொப்பி எனக்குத் தேவையில்லை! ஆனால் ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சட்டத்தை நீங்கள் அமுல் நடத்த எத்தனிக்குமுன்னர் ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும், தமிழ்க் குழந்தையும் தங்கள் கடைசி மூச்சை விடவே தயாராக இருப்பார்கள்—"

திரு. சுந்தரலிங்கம்:

"..........இந்த நாடு சிங்களநாட்டை என்றும் தமிழ் இலங்கை என்றும் பிளவு படுமானால் அது இந்த அரசினதும் 1956ஆம் ஆண்டிலிருந்த பிரதம மந்திரியினதும் தவறான நடத்தையினால்தான் என்று வரலாறு கூறுமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்"

# காட்சியும் கணிப்பும்

VINAYAGAR LIBRARY
ARLALAI WEST
CHUNNAKAM



இந்தப் படத்திலுள்ள பச்சிளம் குழந்தையின் நெஞ்சில் மூன்று துவாரங்கள் காணப்படுகின்றன. கொலை வெறியனின் கைவண்ணம் இது; இதுவும் பயங்கரவாதியா ?

## கொலைக்களமான படகுச்சேவைப் பாதை !

தீவுப்பகுதிகளுக்கும் யாழ்ப் பாணத்துக்குமிடையேயுள்ள படகுச் சேவையை நம்பியே தீவுப்பகுதி மக்கள் வாழ்கிறார்கள்' அப்பகுதி மக்கள் பிரயாணம் காலநிலை சீராக இருந்தபோதுதான் இதுவரை பாதிக்கப்பட்டது; ஆனால் இப்போது கடற் காவல்துறையினாலும் பாதிக்கப்படுகிறது. பிரயாணம் மட்டுமல்ல தீவுப்பகுதி மக்களின் வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது.

சென்ற மாதம் 22ந் தேதி நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு ஆகியபகுதிகளிலிருந்து படகுகள் குறிகாட்டுவான், சிறுப்பிட்டி, ஊர்காவற்றுறைத் துறைகளுக்குப் புறப்பட்டுவந்த சமயம் கடற்காவல் துறையினர் நடுக்கடலில் நின்று துறைகளில் நின்றும் படகுகள் தீவுப்பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் துறைகளுக்குச் செல்லக்கூடாதெனத் தடுத்தார்களாம். அச்சமயிலிருந்து 'பொடியள்' பெருமளவில் தீவுப்பகுதிகளில் வந்திறங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததால் இப்படி 'தடை' நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாம். இந்தத்தடை அதிகநேரம் நீடிக்கவில்லை, மறு நாளே சேவை சீரானது.




மேலேயுள்ள படம் படுகொலை நிகழ்ந்த இடத்தையும் தீவுப்பகுதிகளையும் படகுச் சேவைப் பாதையையும் தெளிவாகக் காட்டுகிறது.

ஆனால்......

சென்ற மே மாதம் பதினைந்தாம் தேதி நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் துறையை நோக்கி சென்றுகொண்டிருந்த 'குமுதினி'' என்ற படகிலிருந்த பிரயாணிகளுக்கு நடுக்கடலில் நிகழ்ந்த பயங்கர முடிவுபற்றித் தெரிந்தவர்கள் மீண்டும் பயணத்துக்குத் தடை என்றதும் பீதியடைந்ததில் ஆச்சரியமில்லை. 'குமுதினி' படகில் அன்று பயணம் செய்தவர்கள் தங்கள் பயணத்தை முடிக்கவில்லை! பச்சிளம் குழந்தை முதல் பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியர் என முப்பத்துமூன்றுபேர் நடுக்கடலில் கோரமாகத் தாக்கிக்கொல்லப்பட்டனர்; ஒரு சிலர் படுகாயங்களுடன் உயிர்தப்பினர், வேறு சிலர் கடலுக்குள் வீசப்பட்டனர்!

## விடுதலை செய் அல்லது விசாரணை செய் !

## வீடழிப்புத்திட்டம் இங்கே



கீழ் சில வீடுகள் அமைக்கப்பட்டதுண்டு.

காவற்குழியில் முன்னூறு வீடுகள் பெரும் திட்டங்களில் ஒன்றாக அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின்





பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குப் பிரதமர் பிரேமதாசா பல திட்டங்கள் வகுத்துச் செயல்படுகிறர். கிராமோதயக் கணகாட்சிகள் முதல் சுரண்டல் சுவீப்புகள் வரை நடாத்திப் பணம் திரட்டுகிறர் சிங்கப்பூர் மாதிரியை சிலசமயங்களில் பின்பற்றுகிறர்

வடக்கில் ஒன்றிரண்டு கிராமங்களில் கிராமோதயத் திட்டத்தின் இங்குள்ள சிங்கள மக்களுக்கு இத் திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இடையிடை யோசனைகள் தெரிவிக்கப்பட்டன

இன்று ஆயுதப்படைகளின் பாதுகாப்புக்காக தங்கள் சொந்த இடங்களிலிருந்து குடியெழுப்பப்படும் மக்களுக்கு "தங்குவிடுதி"களாக இந்த வீடமைப்புத் திட்ட வீடுகள் உதவுகின்றன!

வீடமைப்புத்திட்டங்களைப் பற்றி வடக்கில் இப்படி விரல் விட்டுத்தான் கணிப்பெடுக்கலாம்! ஆனல் வடக்கில் "வீடு அழிப்பு' பற்றிக் கணிப்பெடுக்க இன்னும் காலம் வரவில்லை!

மாடமாளிகையாகப் பார்ப்போர் கண்ணைக்கவரும் வண்ணமாகமிளிர்ந்த பல வீடுகள், கட்டிடங்கள் பாதுகாவலர்களால் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாகக் கிடக்கும் காட்சிகளை வடக்கில் பலஇடங்களில் காணலாம். மேலே உள்ள படம் இப்படித்தரை மட்டமாக்கப்பட்ட ஒரு புதிய வீட்டின் நிலைகுலைந்த தோற்றம்



ஒன்றரை வருடங்களுக்கு மேலாகவும் விசாரணையெதுவுமின்றி சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சென்ற ஆகஸ்ட் எட்டாம் தேதி முதல் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருவர் இருவராகச் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். சிலரின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்தன. சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு அனுதாபந் தெரிவித்தும் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களை "விசாரணை செய் அல்லது விடுதலை செய்" என்று அரசைவற்புறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சென்ற 22-ஆந் தேதி யாழ்ப்பாணக் கச்சேரி முன்பும், மற்றும் வங்கிகள் அரச அலுவலகங்கள் முன்பும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் மறியல் செய்தனர். அவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தினர். யாழ். பல்கலைக்கழகத்தில் 4 மாணவியர் 15 மாணவர்களும் சென்ற திங்கட்கிழமை தொடர்ச்சியான உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

## பிணக்காடான வவுனியா!

வவுனியா கண்டி வீதியிலுள்ள தோணிக் கல்லு, தேக்காடு ஆகிய இடங்களிலும் மற்றும் பல இடங்களிலும் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினுல் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பெருந்தொகையானேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களுள் குழந்தைகள், பெண்கள், முதியோரும் அடங்குவர். வவுனியா சர்வோதய இயக்க அமைப்பாளர் திரு. கதிரமலையின் கர்ப்பிணி மனைவியும் அவரது மாமன், மாமியும் கொலையுண்டனர். கொலையுண்டவர்களின் சடலங்களைக் கூட எடுத்து வருவதற்கு உறவினர்கள் அங்கு செல்ல முடியாதிருந்தது. சர்வோதய அமைப்பாளரின் மனைவி, மாமி, மாமனுடைய சடலங்கள் சர்வோதய இயக்கத் தலைவர் திரு ஏ. ரி. ஆரியரத்தின வவுனியாவுக்கு வந்து எடுத்த முயற்சியினுல் கிளிநொச்சிக்குக் கொண்டு வரப்பட்டு ஈமச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த சடலங்கள் பலவும் உறவினர் சென்று அடையாளம் காண முடியாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன. வவுனியாச் சம்பவத்தில் சாதாரண பொதுமக்கள் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக வேண்டுமென்றே வதந்தி பரப்பப்பட்டதாகவும் இது திம்பு சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கென்று செய்யப்பட்டதென்றும் ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் பின்னர் தெரிவித்தார். ஆகஸ்ட் 16ஆந் தேதி நடந்த இச்சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து மறுநாள் பெருந்தொகையான சடலங்கள் நள்ளிரவு வேளையில் பாரிய வாகனங்களில் வந்தவர்களால் ஏற்றிச் செல்லப்பட்டன. வவுனியா சூட்டுச் சம்பவம் பற்றி விசாரணை செய்வதற்கு ஜனதிபதி நியமித்த இராணுவ விசாரணைக்குழு வவுனியா சென்று விசாரணை நடத்தித் திரும்பியது. வவுனியாவிலிருந்து பெருந்தொகையானேர் வெளியேறி கிளிநொச்சி, மன்னர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் தமிழ்நாட்டில் ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இங்குள்ள படத்தில் காணப்படுபவர் வவுனியாவைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் என்பவர். வவுனியாச் சூட்டுச் சம்பவத்தில் இவரது மனைவியும் நான்கு பிள்ளைகளும் கொல்லப்பட்டனர். இவரது மற்றொரு நான்கு வயது மகள் மஞ்சளாவைக் காணவில்லை. மகாலிங்கம் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 15-ஆந் தேதி காலை வவுனியாவில் தோணிக்கல் என்ற இடத்துக்குச் சமீபத்தில் வசித்து வந்த சிங்களவர்கள் ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமுக்குச் சமீபமாகவுள்ள நவகம என்ற இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டனரென்றும் 16-ஆந் தேதி அதிகாலை 5 மணியளவில் ஒரு ட்ரக் வண்டியில் வந்த பாதுகாப்புப் படையினர் இலங்கை விமானப்படைமுகாமுக்குச் சமீபத்திலுள்ள ஒரு மதகுக்கு அருகில் எதையோ புதைத்து வைத்துவிட்டுச் சென்றதாகவும் சிறிது நேரம் கழித்து அங்கிருந்து வெடி வெடித்ததாகவும் மதகுக்குச் சிறிது சேதமே ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் வீடுகளிலிருந்தவர்களும் வீதிகளில் சென்றவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



**செய்திக் கதிர்**
**1-9-85**

# உல்லாசப்பயணமல்ல உயிரைப்பணயம் வைத்து

(இரவோடு இரவாகக் கடற்பிரயாணம் செய்வது புலிகளுக்கும் அவர்களது சகாக்களுக்கும் நாளாந்த வாழ்க்கையாகிவிட்டது. அதனால் இந்தக் கடல் பயணம் வெறும் உல்லாசமா? உயிராபத்துக்கள் நிறைந்த இந்தப் பயணத்தையும் யாழ்ப்பாணத்தின் இன்றைய வாழ்வையும் 'அனுபவித்து' "த வீக்'' சஞ்சிகையின் நிருபர் பக்வன் ஆர் சிங் எழுதிய கட்டுரை இங்கு எமது வாசக நேயர்களுக்காகத் தமிழில் தரப்படுகிறது.)

நடுநிசியாகி வெகு நேரமாகிவிட்டிருந்தது. சந்திரன் உதயமாயிற்று. எம்மைச் சூழ இருந்த சமுத்திர நீரின் மீது பட்ட நிலா ஒளி, வெள்ளிப் பாளங்களாகப் பளிச்சிட்டது. இந்தியக் கடற்கரை இன்னமும் வெகு தொலைவிலேயே இருந்தது.

எமது சிறிய ''ஃபைபர் கிளாஸ்'' படகின் நீளம், ஏறத்தாள இருபது அடி இருக்கும். அதனுள், நாம் எல்லோருமாக ஒன்பது பேரும் அலுத்துக் களைத்துப் போயிருந்தோம். வள்ளத்தின் தரை மீது சிலர் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தனர். அதன் ''சைட் போர்ட்'' எனப்படும் படகு விளிம்பின் மிதிபலகை குந்தியிருக்கும்போது கூடதோளளவு உயரமிராது. அதனோடு சார்ந்தபடி இருந்தனர் சிலர். அக்கலத்தினுள் பரிபூரண விழிப்பு நிலையில் இருந்தவர்கள் மூவர் மாத்திரமே. தோணியின் உயர்வலு வாய்ந்த மூன்று மோட்டர்களையும் இயக்கி அதனைச் செலுத்திக் கொண்டு இருந்தோரே அவர்கள். கடந்த காலத்தில் மயிரிழையில் தாம் தப்பித்துக் கொண்ட தமது வீர தீரப் பிரதாபங்களைக் கதை ரூபமாக எடுத்துச் சொல்லி, எல்லோரையும் தம்மைப் போலவே உற்சாகமாக, விழிப்புடனிருக்கச் செய்வதற்கு அவர்கள் அரும்பாடு பட்டனர்.

அம்மூவரில் ஒருவர், கழுகுக் கண்களால் தொலைவிலுள்ள அடிவானத்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்தபடி, படகின் முன்புறத்தில் அமர்ந்திருந்தார். மீகாமன்மார் முக்கியமானவர்கள் என்றால், இவரே அவர்களுள்ளும் பரம முக்கியஸ்தர். பகைக் கடற்படைப் படகுகள் அணுகிவருவதை முதன்முதலில் அறியத்தரும் 'றேடார்'' நுணுக்காடி போன்றவை பரந்தவொரு வீச்செல்லையைச் சதா துளாவி வரும் இவரது கண்கள். இலங்கை அரச கடற்படையின் சுற்றுக் காவற் கலங்கள், தடையாணைக்குட்பட்ட இவ்வலயத்தினுள் சஞ்சரிப்பதை, அக்கடற்பிராந்தியத்தைக் கடந்து கொண்டிருந்த நாமனைவரும், அதாவது எட்டுத் தமிழீழ விடுதலைப் புலிகளும், பத்திரிகையாளராகிய நானும், நன்கு அறிந்திருந்தோம்.

> "திடீரெனத் துப்பாக்கிச் சூட்டொலி எமது செவிகளிற் பட்டது. அத்துடன் சேர்ந்து துப்பாக்கிக் குண்டுகள் விர்- விர்- ரென எம் மத்தியிலும் எம்மைத் தாண்டியும் பாயத் தலைப்பட்டன. சில குண்டுகள் வள்ளத்தின் பக்கத்தில் ''பட்-பட்-பட்'' எனப்பட்டுத் துளைத்தன''

இந்தியப் பத்திரிகையொன்றின் சார்பில், இலங்கைத் தீவிலுள்ள நிலைமையைக் கண்கூடாகக் கண்டு விபரமறிய, நான் இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டியது ஆயிற்று. அம்முறை, போரினால் சிதையுண்டிருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து நாம் மீண்டுகொண்டிருந்தோம். இவ்வாறு இரவோடு இரவாகக் கடற் பயணம் செய்வது 'புலிகளுக்கும்' அவர்களது சகாக்களுக்கும் நாளாந்த வழமையாகி விட்டிருந்தது

வெறும் கண்ணுக்கு அரிதில் எட்டும் தொலைவில், சிறு கரும்புள்ளியெனத் தென்படுவன, இலங்கைக் கடற்படையின் ரோந்துக் கலங்கள். எங்கோ அந்தக் கடற்பிராந்தியத்தில், அவற்றின் நடமாட்டம் வெகுதூரத்திலில்லை என்பதைப் "புலிகள்'' அறிவர். எனவே, அவர்கள் அவற்றைக் ''கரியன்கள்'' என அழைப்பர். கரியன்கள் நெருங்கி வருவதை இயன்றளவு "வெள்ளெனக்'' கண்டுபிடிப்பது இக்கரைய பயணத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரதும் கடப்பாட்டுப் பணி ஆகும். எப்படியோ, அலுப்பும் களைப்பும் எம்மை அயரச் செய்துவிட்டன. அலை கடலைத்தாம் தொலைவில் அவர்கள் கண்கள் அத்தனையும் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. எமக்குப் பின்னால் தென்பட்ட அந்தக் கரியன், புள்ளியை எவருமே சற்றும் கவனிக்கவில்லை.

படகின் மோட்டார் இயக்குநர்கள் சாதாரணமாக அத்திசைக் கவனிப்பது வழமைக்கும். அவர்களுடன், படகோட்டிகளை எதிரும் புதிருமாக நோக்கிய வண்ணம், எமது வள்ளத்தின் பின்புறமாக உட்கார்ந்திருக்கும் இரண்டு ஆட்களுங்கூட இக்கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பதுண்டு. இந்நால்வரில் நானும் ஒருவன். அந்த "கரியன்'' எங்கள் நாலு பேரில் எவருடைய பார்வையிலும் படாமல் எம்மை நெருங்கியிருக்க வேண்டும். எவ்வாறாயினும், திடீரென துப்பாக்கிச் சூட்டொலி எமது செவிகளிற்பட்டது அத்துடன் சேர்ந்து, துப்பாக்கிக் குண்டுகள் விர்-விர்-விர்ரென எம்மத்தியிலும், எம்மைத் தாண்டியும், பாயத் தலைப்பட்டன. சில குண்டுகள் எமது வள்ளத்திற்கு மேலாகச் செல்ல, வேறு சில அதன் பக்கத்திற்

13-ம் பக்கம் பார்க்க

# நிகழ்வுகள்

## ஆகஸ்ட 15

மாத்தறைச் சிறையில் தடுப்புக் காவலிலிருந்த 6 தமிழ் இளைஞர்கள் தங்காலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது தப்பியோட முயன்றதால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

மகவாச்சியில் ஆயுதம் தாங்கிய கோஷ்டியினரால் இரண்டு போக்குவரத்துச் சபை பஸ்கள் பிரயாணிகளுடன் கடத்தப்பட்டதாகவும் அதில் ஒன்றைப் பொலிஸார் மீட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த பாவற்குளம் பகுதியில் நடந்த அசம்பாவிதத்தில் 3 தமிழர்களும், 4 சிங்களவர்களும் கொல்லப்பட்டனர்.

தமிழர் முஸ்லிம்களைப் பிரித்தாள ஸ்ரீலங்கா அரசு சதி செய்வதாக 'புளொட்' இயக்கப் பிரதிநிதி பிரேம் நவாஸ் திம்பு மகாநாட்டில் குற்றம் சாட்டினர்.

கொழும்பிலிருந்து திருகோணமலை சென்ற இரண்டு தனியார் பஸ்கள் 6ம் கட்டை என்னும் இடத்தில் வழிமறிக்கப்பட்டு 10 தமிழ்ப் பிரயாணிகள் கொல்லப்பட்டனர்.

## ஆகஸ்ட் 16

வவுனியாவைச் சேர்ந்த தோணிக்கல்லு தேக்கங்காடு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தமிழர்கள் 70 பேருக்குமேல் மரணமடைந்தனர். 20 வீடுகள் எரியுண்டன. இறந்தவர்களில் சிறுவர் சிறுமியரும் அடங்குவர்.

வவுனியா அசம்பாவிதங்களையடுத்து 400 தமிழ்க் குடும்பங்கள் 'யாழ்தேவி' ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

திருகோணமலையில் உதவி அரசாங்க அதிபர் ஒருவருக்கு உதவியாகச் சென்ற பாதுகாப்புப்படையினர் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

நிலாவெளியில் வைத்துக்கடத்தப்பட்ட 37 சிங்கள மீனவர்களின் சடலங்கள் திருகோணமலைப் பகுதியிலுள்ள கடற்கரை கிராம மொன்றில் கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## ஆகஸ்ட் 17

வவுனியாவில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து பூட்டான் மகாநாட்டிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர்.

(14-ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன உடல்கள்

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதியை போக்குவரத்திற்காக கொமாண்டோக்கள் தடை செய்து வைத்திருந்தனர். இவ்வாறு தடை செய்யப்பட்ட ஒரு வாகனத்தின் சாரதி 'என்ன நடக்கிறது?' என்று ஒரு கொமாண்டோவை வினவியபோது புலிகளுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் யுத்தம் நடப்பதாகப் பதில் தரப்பட்டது.

இந்த விஷயங்களை, கல்முனை பிரஜைகள் குழு பொலிஸ், ராணுவ உயரதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தது. ஒரு உயர் பொலிஸ் அதிகாரி இந்தச் சம்பவங்களை விசாரிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் உடன்பட்டு 10-ம் திகதி மாலை 3-30 மணியளவில் காணாமல் போன இளைஞர்களின் பெற்றோர்கள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் சிலர் ஆகியோருடன் புதைகுழிகள் உள்ள இடத்திற்கு பார்வையிட வந்தார். பாரிய புதைகுழிகளையும், உடல்கள் புதைக்கப்பட்டு மறுபடியும் எடுக்கப்பட்டதற்கான அடையாளங்களையும் தவிர வேறொன்றுமே முதல் பார்வைக்கு அகப்படவில்லை.

## சிதைந்த சடலம் இரத்த ஆடை

மயானத்திற்கு மேலும் உட்புறமாக நடந்து சென்றபோது, இன்னொரு புதைகுழியில் சிதைந்த ஒரு சடலத்தையும், இரத்தம் படிந்த ஆடைகளையும் கண்டனர். இன்னுமொரு புதைகுழியில் இரத்தக்கறை படிந்த ஷேர்ட் ஒன்றும் அடையாள அட்டை ஒன்றும் மீட்கப்பட்டன. அடையாள அட்டைக்குரிய இளைஞனின் தகப்பனாரும் இந்தக் குழுவில் இருந்ததால் உடனடியாக அவருடைய அழுகையை எவராலுமே கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று.

பின் மாலை ஆகி விட்டதால், பிரேத பரிசோதனையை மறுநாள் அதிகாலை நடத்தலாம் என பொலிஸ் அதிகாரி தெரிவித்ததைத் தொடர்ந்து அனைவரையும் அடுத்த நாட் காலை குறித்த ஒரு இடத்தில் வந்து சந்திக்கும்படி பொலிஸ் அதிகாரி கேட்டுக் கொண்டார். அடுத்த நாள் இருந்த கடைசி உடலும் காணாமல் போய் விட்டது. பொலிஸ் அதிகாரிகள் வரவுமில்லை!

புதைகுழிக்குள் இருந்த உடல்கள் எங்கே போயின என்பது உத்தியோக பூர்வமாக எவருக்கும் தெரியாது. ஆனால் 21-ம் திகதி அதிகாலை தந்திரமான வாகனங்களில் வேப்பமிலைகளாலும், குழைகளாலும் மூடப்பட்ட நிலையில் பல உடல்களை கொண்டு சென்றதைப் பார்த்த பலரை எவ்வாறு 'உத்தியோக பூர்வ' மான சாட்சிகளாகக் கொண்டு வரமுடியும்?

காணாமல் போன 25 இளைஞர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உள்ளனர்.

இந்தச் சம்பவங்களின் மிகவும் மோசமான பின்னிணைப்பு என்னவென்றால், இச்சம்பவங்கள் வெளியே தெரிய வேண்டி வந்தமைக்குப் பொறுப்பானவர், இலங்கை அரசின் சட்டங்களின்படி 'பொய்யான தகவல்களைப்' பரப்புபவர் என்ற குற்றச்சாட்டில் சிறையிலடைக்கப்பட்டார். அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பாக அவர் தாக்கல் செய்த வழக்கும் அவருக்குச் சாதகமாக அமையவில்லை.

நான் இதை எழுதி, நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கிற இக்கணத்தில் மேலும் எத்தனை புதைகுழிகளும் தீச்சுவாலைகளும் எழுந்துகொண்டிருக்கின்றனவோ தெரியாது!

நீங்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டே
ஈழத்துச் செய்திகளை அறிந்திட
வெளிநாட்டு நண்பருக்கும் அன்பருக்கும்
ஈழத்துச் செய்திகளை அறிவித்திட
இன்றே

## செய்திக் கதிர்

சந்தாதாரராகுங்கள்!

## செய்திக்கதிர்

ஈழத்துச் செய்திகளை
சுருக்கமாகவும் சுவையாகவும்
தொலைதூரத்திலிருந்தாலும்
உரிய நேரத்தில் பெறவேண்டுமென்ற
ஆயிரக்கணக்கான
வெளிநாட்டு வாசகர்களின்
ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்குடன்

**மாதமிருமுறை வெளிவரும்**
**இருவார**
**செய்தி விமர்சனத் தொகுப்பு**

உடனடியாக
உங்களுக்கெனவோ
அல்லது
உங்கள் நண்பர், உறவினருக்கென
அன்பளிப்பாகவோ
செய்திக்கதிர் கிடைக்கவிரும்பின்
நீங்கள் செய்ய வேண்டியது
சந்தாவைச் செலுத்துவதும்
உங்களது
அல்லது
உங்கள் அன்புக்குரியவரது
உள்நாட்டு / வெளிநாட்டு
விலாசத்தை அறியத்தருவது மட்டுமே

### இலவசம் !

வெளிநாட்டு வாசகர் ஒருவரின்
விலாசத்தை எமக்கு நீங்கள் அறியத்தரின்
செய்திக்கதிரின் ஒரு பிரதி முற்றிலும்
இலவசமாக அவருக்கு அனுப்பி
வைக்கப்படும்


# தமிழ்ப் பகுதியில் அறிவகங்களின் அழிப்பு

பருத்தித்துறையில் மெதடிஸ்த மிஷனால் ஸ்தாபிக்கப்பட்ட ஹாட்லிக் கல்லூரியில் நூற்றிஐம்பதாண்டுகால புத்தகச் சேர்வுகளுடன் கூடிய நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவாகிறது. 1984-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் தேதி இந் நூலகத்துக்கு பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் தீ வைத்தனர்.

1981-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி தென்கிழக்காசியாவிலேயே தலைசிறந்த நூலகங்களுள் ஒன்றாகத் திகழ்ந்த யாழ். பொதுநூல் நிலையம் ''பாதுகாவலர்களால்'' கொள்ளி வைக்கப்பட்டது. இந்நூல் நிலையத்தைப் புனரமைப்பதற்கு உலக நாடுகளிலுள்ள பலரும் உதவியளிக்க முன்வந்தனர். வெளியாரின் உதவியினால் நூல் நிலையத்தின் புதிய கட்டடம் உருவாகியிருக்கிறது. ஆனால் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்டது பற்றி தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் கவலையடைந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் எவரும் இதற்காக வருத்தம் தெரிவிக்கவுமில்லை!

இந்நூல் நிலையத்திற்கு நஷ்டஈடாக ஒருகோடி பத்துலட்சம் ரூபாய் வழங்கப்படவேண்டுமென லயனல் பெர்னாண்டோ அணைக்குழு சிபார்சு செய்தது. ஆனால் இதுவரை இருபதுலட்சம் ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. கிடைக்கற்கரிய ஓலைச்சுவடிகளும் மற்றும் நூல்களுமடங்கிய தொண்ணூற்றி ஏழாயிரம் சேர்வுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பொது நூலகம் தீ வைக்கப்பட்டதிலிருந்து வடக்கில் அறிவாலயங்கள் பல தீ வைத்துக்கொழுத்தப்பட்டன; அழிக்கப்பட்டன.

1 யாழ். பொது நூலகம் தீ வைக்கப்பட்டது 1981.

2. இரண்டாயிரத்துக்குமதிகமான நூல்களுடன் திக்கம் நூலகம் எரியூட்டப்பட்டது — 1984

3. ஒன்றரை நூற்றாண்டுகால புத்தகச்சேர்வுடன் உவெஸ்லி மெதடிஸ்தமிஷன் ஹாட்லிக் கல்லூரி நூலகம் எரிக்கப்பட்டது — 1984

4. பொலிகண்டி நூலகம் சிதைக்கப்பட்டதும் 1984.

5. சுவீடிஷ் நாட்டு மக்களின் நன்கொடையால் பல இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்ட காரைநகர் ''குளோப் நூலகம்'' அழிக்கப்பட்டது — 1985.

6. அரியாலை கலைமகள் வட்டார சரஸ்வதி சனசமூகநிலைய நூலகம் எரிக்கப்பட்டது — 1985

7. சிறைப்பிடித்தவர்களைப் பூட்டி வைத்து நூல்நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்து வல்வெட்டித்துறைச் சனசமூக நூல்நிலையம் தரைமட்டமாக்கப்பட்டது — 1985.

8. வவனியா நகரசபை நூலகம் தீ வைக்கப்பட்டது — 1985.

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தெரியாதா?

எந்தநாட்டிலும் எந்த இடத்திலும் எந்த மக்களுக்கும் துன்பமும் தொல்லையும் ஆபத்தும் அழிவும் ஏற்படும்போது அங்கு உதவிசெய்வதற்கென்றே விரைந்தோடுவது செஞ்சிலுவைச் சங்கம்தான்! ஆபத்துவேளையில் உதவி செய்வது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பது உலகறிந்த உண்மை!

இன்று இலங்கையில் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, திருக்கோயில் ஆகிய இடங்களில் நடைபெறும் படுகொலைகள், புதைகுழிகள், அழிப்புச் செயல்கள் ஆகியவை பற்றிச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தெரியாதா? இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கிளை இல்லையா?

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இங்கு வந்து உதவிசெய்வதற்கு இலங்கை அரசு அனுமதியளிக்கவில்லையென்று ஒரு தகவல் தெரிவிக்கிறது.

இது உண்மையானல் இதற்கான காரணம் என்னவென்பதை அரசு வெளியிடுவதற்கு வற்புறுத்தப்பட வேண்டும்.

திருமலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் வடக்கு கிழக்கிலுள்ள பல பகுதிகளிலும் அகதிமுகாம்களில் ஆயிரக்கணக்கானோர் தினமும் அல்லல் படுகின்றனர். அநுராதபுரத்திலும் திருமலைப்பகுதியில் திரியாய் என்ற இடத்திலுமுள்ள அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்திருந்தவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தெரியாமலிருக்க முடியாது.

ஆடுமாடுகள்கூட ஒரே புதைகுழியில் ஒன்றின் மீது ஒன்ருக அடுக்கப்படுவதில்லை. இங்கு இப்படி மனித உடல்களைப் புதைக்கும் அட்டூழியச் செயல்கள் அம்பலமாகிவிடுமென்பதால் சர்வதேச அமைப்புக்கள் இங்கு உதவிக்கு வருவதற்குத் தடை செய்யப்படுகிறதா?

சர்வதேச அரங்கில் எழுப்பப்பட வேண்டிய கேள்விகள் இவை!

## உல்லாசப் பயணமல்ல

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பட்-பட்-பட்'' எனப் பட்டுத் துளைத்தன. அப்போது தான் நாங்கள் விழிப்பு நிலைக்கு உலுப்பி விடப்பட்டோம்; உயிராபத்தின் வாயிலில் நாம் மாட்டிக் கொண்டிருப்பது எமக்குப் புலனாயிற்று.

அடுத்த சில கணங்களாகப் பூரணப் பீதியும் திகிலும் எமது சின்னஞ்சிறிய கலத்தினுட் தாண்டவமாடின. அதேசமயம், இலங்கை அரசின் படகிலிருந்து துப்பாக்கி ரவைகள் எம்மைச் சுற்றி சரமாரியாகப் பொழிந்து கொண்டேயிருந்தன. படகின் மோட்டர் இயக்குநர் இருவரில் ஒருவரான சசி, "முன்னே போங்கள் எல்லாரும்!'' என உரக்கக் கூவினர். "முன்னுக்குப் போய்ப் பணியப் படுங்கள்!'' எனப் பலத்த சத்தமிட்டு ஆணையிட்டார் சுபாஷ். எம்முடன் வந்த போராளிகளின் தலைவர் அவரே.

நான், படகின் பின்பக்கமாக வைக்கப்பட்டிருந்த பெற்ரேல் பீப்பாவோடு முதுகுப்புறமாகச் சாய்ந்தபடி அலைகளுக்குத் தாக்குப்பிடித்தவாருகக் குந்தியிருந்தேன். அன்றிரவு காற்று வேகமாக வீசவே, அலைகளும் விம்மி உயர்ந்தெழுந்து எமது சிறிய தோணி மீது பலமாகத் தாக்கிக் கொண்டிருந்தன. இவை ஒரு புறமும், வள்ளத்தினுள் இருந்தோரின் கூச்சல் கூப்பாடுகள் மறுபுறமும், உயிர் குடிக்கும் துப்பாக்கி ரவைகள் இன்னெரு புறமுமாக, எம்மையெல்லாம் நிலைகுலையச் செய்ய, நான் முற்றும் செயலிழந்து கல்லாகச் சமைந்து போனேன். "முடிவு இதுதான்'' என எனக்குள் எண்ணிக்கொண்டேன் நான்.

வல்ல படகோட்டி எனப் பெயர் பெற்றவர் சசி. இலங்கைக்கடற்படையினருடன் ஆழ்கடலில் பலமுறைமோதல்களுக்கு ஆளாகி, தமது படகும் பயணிகளும், பெரும் பாதிப்புறுது தப்பிப் பிழைக்கச்சாமர்த்தியமாகவழிகோலிய அனுபவசாலி. "கெசஇருட்டி'' லும் அவரது முகத்தை கூர்ந்துநோக்கிய எனக்கு என்னிடமிருந்த அதேயளவு பயப்பிராந்தி, ஏதோ அவரிடமும் நிழலாடியதாகத் தெரிந்தது. "தோணியைக் கரைக்குஇழுத்தாலென்ன? ஆழமில்லா நீருக்குள் அந்தப் பெரும் படகு எங்களைத் தொடராது; தொடர முடியாது.'' என்று ஆற்ருமை தாளாது அவரைப் பார்த்து நான் உரக்கக் கத்தினேன்.

"பகைவனின் (இலங்கைக் கடற்படையின்) பெரிய படகிலிருந்து துப்பாக்கிகள் இடைவிடாது கக்கிய குண்டுகள், இருளில் பளீர் பளீரென மஞ்சள் தீப்பிழம்புகளாகப் புறப்பட்டு, எம்மை நோக்கி மழையெனப் பாய்ந்து கொண்டிருந்தன. அவை வெடிக்கும் ஓசையும், காற்றினூடாகக் கிழித்துச் செல்லும் ரவைகளின் ஙொய், ஙொய் எனும் ஒலியும் சேர்ந்து பேரிரைச்சலாக எழ, நான் கூறியதில் எவ்வளவு சசிக்குப் புரிந்ததோ தெரியவில்லை. அவரும் மற்றைய படகோட்டியும், தோணியின் தரை மீது தாழப் பதுங்கிய வண்ணம் மோட்டாரின் 'ஸ்பீட் த்ரொட்ல்' எனப்படும் விரைவு முடுக்கியையும் சுக்கானையும் எட்டிப் பிடித்தியக்கக் கைகளை நீட்டிக் கொண்டு இருந்தனர். குண்டுகள் மேனியிற் படாதவாறு, நாம் அனைவரும் அப் படகுத் தரைமீது பதுங்கியபடியே இருந்தோம்.

இருந்தாற்போல, "ஐயோ முருகா இதோ பக்கத்திலை வந்துட்டான்டா!'' எனக் குளறினர் நாராயணன். வள்ளத்திற் பயணமானவர்களில் அவரும் ஒருவர். எமக்கு வலது கைப்பக்கமாக ஐம்பது யார் கூட இராது, அந்த இலங்கைக் கடற்படைக் கலம் எம்மை அணுகி நின்ற இடம். அவ்விருளிலும் அது பிரமாண்டமாகத் தோற்றமளித்தது. அதன் மேற்தள ஓரமாக, வரிசையாகப் பதுங்கி நின்ற உருவங்கள் எமது சிறிய வள்ளத்தின் மீது துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன.

துணுக்குற்ற என் மனம் நிரம்பிய எண்ணம்ஒன்றேயொன்றுதான். "நான் சாகப் போகிறேன். எனது உடல் கடலுள் மூழ்கும்'' கடலில் அமிழ்ந்தி இறப்பது அவ்வேளை அவ்வளவு இனிமையான அனுபவமாக எனக்குப் படவில்லை.

சசி மீண்டும் வீரிட்டு அலறினர். "முன்னுக்குப் போங்கோ! எல்லாரும் முன்னுக்குப்போங்கோ, ஆண்டவனே'' எனக்கு அருகில் இருந்த மனோகரன் படகின் முற்பகுதிக்குப் பாய்ந்தான்; நானும் பின் தொடர்ந்தேன். தலைகளும் மேனிகளும் அச்சிறிய எமது தோணியின் ''சைட்போர்ட்'' என வழங்கும் விளிம்பு மிதி பலகையின் கீழ் பாதுகாப்புத் தேடி ஒதுங்கிக் கொண்டன. மனோகரனின் 'முனகல்' ஈனமாக என் காதில் விழுந்தது. ஒரு வேளை இந்தச் சந்தடியில் அவரது தலை கடும் தரைமீது மோதுண்டுவிட்டதோ என எனக்குள் கேட்டுக் கொண்டேன்.

(தொடரும்)

# நிகழ்வுகள்

### ஆகஸ்ட் 18

திருகோணமலையைச் சேர்ந்த துவரங்காடு என்ற இடத்தில் சீருடையுடனும், சீருடையின்றியும் சென்ற கோஷ்டியொன்று வீடுகளுக்குள் புகுந்து வீட்டிலுள்ளவர்களை வெளியே இழுத்துச் சுட்டுக் கொன்றனர் 24 சடலங்கள் மீட்கப்பட்டன. 15 வீடுகள் எரியுண்டன.

### ஆகஸ்ட் 19

பொத்துவிலில் சோதனைத்தடை முகாமிலிருந்த பொலிசார் சுட்டதில் ஜப்பானியர் ஒருவர் கொல்லப்பட்டார்.

திருகோணமலையைச் சேர்ந்த பன்குளம் பகுதியில் ஊர்காவற்படையினருக்கும் தமிழ் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த நேரடி மோதலில் 12 தமிழர்களும், 8 சிங்களவர்களும் கொல்லப்பட்டதாகவும் ஊர்காவற்படையினரின் துப்பாக்கிகள் பறிக்துச் செல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த 'இன்ரர் சிற்றி' புகையிரதம் மதவாச்சியருகே மர்மமான முறையில் தடம்புரண்டதால் இரண்டு புகையிரத உத்தியோகஸ்தர்களும் 50க்கு மேற்பட்ட பிரயாணிகளும் காயமடைந்தனர். இதனையடுத்து வடபகுதி புகையிரத சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன.

### ஆகஸ்ட் 20

இலங்கைத் தமிழர்கள் 500 பேர் கொலை செய்யப்பட்டனமக்குப் பாரத நாடாளுமன்றம் ஆழ்ந்த கவலை தெரிவித்தது,

### ஆகஸ்ட் 21

மூதுரைச் சேர்ந்த தெகிவத்தை என்னும் இடத்தில் நிலக்கண்ணி வெடி வெடித்ததால் இராணுவ ஜீப்வண்டி சிதறியதில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து அப்பகுதி மக்கள் குடிபெயர்ந்தனர்.

### ஆகஸ்ட் 22

பூட்டான் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாரதத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற் கொழும்பில் அறிவித்தது அதற்காகப் பாரதத்தின் கவலையைத் தெரிவித்தார்.

இனி நேரடி யுத்தம் நடத்தப்படுமெனவும், தமிழ் மக்களுக்குத் தற்பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வழங்கப்படுமெனவும் விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் சென்னையில் அறிவிக்கப்பட்டது.

### ஆகஸ்ட் 23

வவுனியா, திருகோணமலை அகதிகளுக்காக நல்லூரிலும், பருத்தித்துறையிலும் அகதி முகாம்கள் திறக்கப்பட்டன.

300 வவுனியா தமிழ் அகதிகள் தமிழ்நாடு மண்டபம் முகாமிற்கு வந்து சேர்ந்ததர்க அறிவிக்கப்பட்டது.

### ஆகஸ்ட் 24

ஈழதேசிய விடுதலை முன்னணியின் பேச்சாளர் டாக்டர். பாலசிங்கமும் தமிழர்களைப் படுகொலையிலிருந்து பாதுகாப்பதற்கான 'புரொரெக்ற்' (PROTECT) அமைப்பின் தலைவர் திரு. சந்திரகாசனும் சென்னையில் கைது செய்யப்பட்டு, 48 மணி நேரத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி இந்திய அரசினால் உத்தரவிடப்பட்டனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த முறக்கொட்டாஞ்சேனையில் பொலிஸ் ஜீப் வண்டி கண்ணிவெடியால் தாக்கப்பட்டதையடுத்து 350 வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### ஆகஸ்ட் 25

தமிழீழ விடுதலை இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் நாடு கடத்தப்படுவதை எதிர்த்து திரு. மு.கருணாநிதி. திரு. ப. நெடுமாறன், திரு. கி. வீரமணி ஆகிய தலைவர்கள் பங்கு பற்றிய பெரும் கண்டன ஊர்வலமொன்று சென்னையில் நடைபெற்றது.

### ஆகஸ்ட் 26

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவிலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 4 தீவிரவாதிகளும் பொதுமக்களில் 22 பேரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### ஆகஸ்ட் 27

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

### ஆகஸ்ட் 28

வெலிக்கடைச் சிறையில் 'விடுதலை செய் அல்லது விசாரணை செய்' என உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளம் கைதிகளுக்கு ஆதரவாக யாழ்ப் பல்கலைக்கழக மாணவ மாணவியர் பத்தொன்பது பேர் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

மூன்று தமிழ் விவசாயிகள் மூதூரில் கடத்தப்பட்டனர். திருமலையில் கண்ணிவெடிக்கு ஆறு கடற்படையினர் பலி.

### ஆகஸ்ட் 29

திருமலையில் தமிழருக்குச் சொந்தமான வீடுகள் பலவும் எரிக்கப்பட்டதாக நேற்றிரவு பி. பி. ஸி அறிவித்தது.

பம்பாய் விமான நிலையத்திலிருந்து வெளியே செல்ல சந்திரகாசன் அனுமதிக்கப்படவில்லை.

நிலாவெளி பீச் ஹோட்டல் 48. அறைகளுடன் குண்டு வைத்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

### ஆகஸ்ட் 30

தமிழீழ விடுதலைப் போராளிகள் நாடுகடத்தலைக் கண்டித்து சென்னையில் நடந்த ரயில் மறியல் ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட 3500 பேர் கைது செய்யப்பட்டனர்.

# திம்புவுக்குப்பின்

# ஒரு திருப்புமுனை

முறிந்துபோன திம்புப் பேச்சுவார்த்தையை மீண்டும் சரி செய்து இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு சமாசத் தீர்வு காணவேண்டு மென்ற ஆவலில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்த ஓர் அவசர நடவடிக்கை திம்பு வுக்குப்பின் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி யிருக்கிறது.

இந்தியாவின் பிரதம மந்திரியாகச் சில மாதங்களுக்கு முன்னர்தான் பதவியேற்ற ராஜீவ் காந்தி அயல்நாடுகளுடனும் உலகநாடு களுடனும் நல்லுறவை ஏற்படுத்திக் கொள் வதில் புதியதொரு அணுகுமுறையை மேற் கொண்டு பெயர் பெற்ருர். உள்நாட்டில் இந் திராவின் உயிரைப் பறிக்கக் காரணமாயிருந்த பஞ்சாப் பிரச்சினைக்கு மதவாதிகளுடன் பேச்சு நடத்தி உடன்பாட்டுக்கு வந்ததுடன் நமைச்சல் கொடுத்துவந்த அஸ்ஸாம் பிரச் சினைக்கு தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு கண்டதும் அவரது ராஜதந்திரத்துக்கு பெரும் மதிப்பு ஏற்பட்டது.

இந்தியையில் பாரதத்துக்கு வெளியே ஒரு அயல் நாடான இலங்கையின் உள்நாட்டு விவ காரத்தில். (அகதிகள் பிரச்சினையால் கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷாக உருவெடுக்கக் காரணமாக இருந்தது போன்று இலங்கை அகதிகளும் இந்தியாவுக்குப் பிரச்சினை!) அன்னை இந்திராவைப் பின்பற்றித் தலையிட்ட ரஜீவ் காந்தி தன் பெயரைக் கெடுத்துக் கொள்ள விரும்ப மாட்டார்.

திம்புப் பேச்சு முறிந்ததைத் தொடர்ந்து இலங்கைக்குத் திரும்பவிருந்த ஜனதிபதி ஜே. ஆரின் விசேஷ தூதுவரும் சகோதரரும் இலங்கைக் குழுவின் தலைவருமான ஹெக்டர் ஜயவர்த்தனவை புதுடில்லியில் தடுத்து வைத்துப் பேசி மீண்டும் திம்புப் பேச்சைத் தொடங்குவதற்கான புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்து முடிப்பதில் ரஜீவ் காந்தி வெற்றி கண்டிருககிருர்!

ஆனுல் இந்த ஆர்வத்தில் இலங்கையின் வற்புறுத்துதக்கு இடமளித்து இந்தியா விலிருந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி யின் பேச்சாளர் டாக்டர் எஸ். பாலசிங்கத்தை யும் சட்டத்தரணி சந்திரகாசனையும் கைது செய்து நாட்டைவிட்டு வெளியேற்றியதும் சட்டத்தரணி என். சத்தியேந்திராவை நாட்டை விட்டுச் செல்லும்படி உத்தரவிட்டதும் எவ் வளவு தவறு என்பதை ராஜீவ் உணர்ந்து கொண்டிருக்கிருர். இது ஒரு திருப்பு முனை யாகவே அமைந்து மிருக்கிறது. நாடு கடத்தப் பட்ட சந்திரகாசன் திரும்பிவிட்டார். பாலசிங் கம், சத்தியேந்திரா விரைவில் திரும்பலாம்'.

இலங்கைத் தமிழர்களுக்கும் ஈழப்போராளி களுக்கும் ஆதரவளித்து வந்ததாகவே இது வரை கருதப்பட்ட தமிழகம் மத்திய அரசின் செயல் கண்டு கொதித்து எழுந்தது! ஒரு நாள் ரயில் நிறுத்தப் போராட்டம் சிறைகளை நிரப் பியது. சிறுசேதங்களையும் விளைத்தது. தீக் குளித்துக் காயங்களுடன் ஆஸ்பத்திரியிலும் ஒருவர் இருக்கிருர். ஈழப்போராட்ட இயக்கத் தலைவர்களை முதலமைச்சர் எம் ஜி ஆர். சந்தித்துப் பேசியபின் தமது அமைச்சர் எஸ். ராமச்சந்திரனை புதுடில்லிக்கு அனுப்பினுர். தமிழ் நாட்டின் உணர்ச்சிகளை ராஜீவ் புரிந்து கொண்டு இலங்கைக்கும் உணர்த்தவேண்டும் இல்லையேல் தமிழ்நாடு பெரும் சோதனை யாக உருவெடுக்கலாம்!

இதேசமயம் இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியா தமக்கு விடுதலையைத் தூக்கித் தரு மென்று அதையே நம்பியிருக்கக் கூடா தென்றும் தமிழ் நாட்டின் ஆதரவுடன் தமிழீழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீ கரிக்கச் செய்து நாமே நமது போராட்டத்தை முன்னெடுத்து விடுதலை காணவேண்டுமென் றும் முக்கிய இயக்கங்கள் இங்கு கருத்து வெளியிட்டு வருகின்றன இடைக்கால சமா சத்தீர்வு முயற்சி ஒருபுறமிருக்க போர் நிறுத் தம் மீறப்பட்டுத் தமிழ் மக்கள் பலர் பலி யாகி வருவது பற்றியும் இந்த இயக்கத்தினர் அதிருப்தியடைந்துள்ளதுடன் போர் நிறுத்தம் நமது போராட்டத்தை வெகுதூரம் பின் தள்ளிவிட்ட தென்றும் கூறுகின்றனர்.

இலங்கையில் தமிழர் பிரச்சினை அரசியல் தீர்வினுல் தீரமாட்டாதென்றும் கடந்த காலங் களில் போல் இப்பொழுதும் கைச்சாத்திடப் படும் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படலா மென்றும் தீவிரவாத இயக்கத்தினர் கூறு கின்றனர்.

அட்டைப் படம்

''செய்திக்கதிர்'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 05 - 09 85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி : 2 3 3 3 6

பனைவளத்தின் பல்சுவையை நாடுவீர்

உங்கள் இல்லங்கள் தோறும்

# பனம் உணவுப் பொருட்கள்

## பனம் பாணி (சிரப்)

இனிப்பானது, உணவுப்
பொருட்களுடன் சேர்த்து
உபயோகிக்கக் கூடியது,

## பனம் கோடியல்

வீட்டிற்கு வரும் விருந்தினரை
உபசரித்து மகிழச் சிறந்த
சுவையான பானம்.

## பனம் ஜாம்

சுவையூட்டப்பட்டது, பாண்
போன்ற உணவுகளுடன்
பூசிச் சுவைத்திடச் சிறந்தது,

## பனம் பானம்

நாள் தோறும் பருகிச்
சுவைத்திடச் சுவைத்திட
இனிமையான பானம் !




மற்றும்

## பனம் வெல்லம்
## பனம் சோஸ்
## பனம் ரொபி

நாடிச் சுவையுங்கள்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

- ★ நவீன தொழில்நுட்ப அறிவுடன் தயாரிக்கப்பட்டவை.
- ★ சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லா வயதினர்க்கும் உகந்தவை
- ★ உயிர்ச்சத்துக்களும், ஊட்டச் சத்துக்களும் மிக்கவை.

# பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம், இலங்கை
தொலைபேசி : 23801, 22094